2243

11 MAY 2022

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தஞ்சாவூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்–3, திரு.N.வில்லாயுதம் என்பவரின் மகன் திரு.வி.ஆனந்தன், இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை–2 பதவியில் பணி நியமனம் செய்தது – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை</u>

அரசாணை (3ப) எண்.16

நாள்: 05.04.2022
பிலவ, பங்குனி 22
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.6354/2020/ந1, நாள்:01.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.21666/2021/டி2, நாள்:26.07.2021.

*****

<u>ஆணை:</u>

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், சேதுபாவாச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்–3 ஆக பணிபுரிந்து 18.03.2020 அன்று பணியிடைக்காலமான திரு.N.வில்லாயுதம் என்பவரின் மகன் திரு.வி.ஆனந்தன் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்டம்,

//Attested//
7.7.22

த.பி.பா.

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 07.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.N.வில்லாயுதம், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்–3 தனது தகுதிகாண் பருவத்தினை 28.12.2004 அன்று நிறைவு செய்துள்ளார் என்றும் அவரது மகன் திரு.வி.ஆனந்தன் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 18.06.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் தனியர் திரு.வி.ஆனந்தன் 22.01.1994 அன்று பிறந்துள்ளார் என்றும் மேலும், தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10–ம் வகுப்பு) March 2009 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்று ஒருங்கிணைந்த சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசு ஊழியர் இறந்த நாளில் (18.03.2020) தனியரின் வயது 26 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 26 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 26 என்றும் தெரிவித்துள்ளார். தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தனியர் 07.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக பணியில் சேர்ந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் நன்கு சூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2–ஆகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.வி.ஆனந்தன் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 பதவியில் 07.12.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

// Attested //

த.பி..பா.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)
பட்டுக்கோட்டை.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 14.03.2022–ஆம் நாளிட்ட அலுவல் சாரா குறிப்பு எண்.42944/ட்டி1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.9062/ஜி3/2022, நாள்:21.03.2022–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்:
திரு.வி.ஆனந்தன் , இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, தஞ்சாவூர் மாவட்டம்.
(வழிமாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒ.மு.ந.க.எண். 6354/20/ந1 மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி) சே.சாந்தி 06/05/2022
நாள். .5.2022 தஞ்சாவூர். பிரிவு அலுவலர்

அரசாணை சார்வு செய்யப்படுகிறது.

பெறுதல்
திரு. வி. ஆனந்தன்
(வட்டார வளர்ச்சி அலுவலகம்)
ஊ.ந.அ. நிலை-2,
ஊராட்சி ஒன்றியம்,
...க்கோட்டை.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
தஞ்சாவூர்.
9/5/2022

//Attested//

2241

| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)(பொ) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை - திருமதி.சோ.சித்ரா, எம்.காம்., | |
|---|---|
| ந.க.எண். 6354/ 2020 / ந.1 | நாள். 09-05-2022 |

பொருள்- பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - தஞ்சாவூர் மாவட்டம் - சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் - மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-III - வில்லாயுதம் (திரு) ந., என்பவர் 18.03.2020 அன்று பணியிடை காலமானது - வாரிசு மற்றும் மகன் ஆனந்தன் (திரு) வி., என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக பணி நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

படிக்கப் பட்டவை-

1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6354/2020/ந1 நாள். 01.12.2020.

2) அரசாணை (3ப) எண். 16 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை நாள். 05-04-2022.

3) தொடர்புடைய ஆவணங்கள்.

-------------

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-III ஆக பணிபுரிந்து 18.03.2020 அன்று பணியிடை காலமான திரு.ந.வில்லாயுதம் என்பவரது மகன் மற்றும் வாரிசு திரு.வி.ஆனந்தன் என்பவருக்கு முதலாவதாக படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் கருணை அடிப்படையில் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) மேலும், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 நிலையில் 07.12.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி அரசாணையின் அடிப்படையில் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 நிலையில் 07.12.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

3) மேற்கண்டவாறு தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)(பொ), தஞ்சாவூர்.

பெறுநர்
திரு. வி.ஆனந்தன்,
த/பெ.(லேட்).N.வில்லாயுதம்,
இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பட்டுக்கோட்டை - உரிய வழியாக.

நகல் - வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், பட்டுக்கோட்டை.
நகல்- ந.1 மற்றும் க.3 பிரிவு இருப்புக்கோப்பிற்கு